**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO.417/2011 LW-2 PW-2

| | |
|---|---|
| Name | ரேணுகோபால் |
| Husband/Father Name | கனேசன் |
| Village /Area | வேலூர் |
| Taluk | |
| Occupation | வனசரக அலுவலர் |
| Age | 56 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 29.07.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரிகள் 3, 6 ஆஜர். எதிரிகள் 2, 5, 7 ஆஜரில் இல்லை. எதிரிகள் 2, 5, 7 சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது 1 மற்றும் 4 எதிரிகள் இறந்துவிட்டனர் )**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வேலூர் வனகாவல் நிலையத்தில் வனசரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.12.2010 அன்று ஆற்காடு வனசரகத்தில் வனகாப்பாளராக பணிபுரிந்த போது வனசரக அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் காலை 11.30 மணியளவில் வனசரக அலுவலர் காளிதாஸ், வனவர் ஜெயகுமார், வனகாப்பார் ஆறுமுகம் மற்றும் நானும் காரையிலிருந்து புலியங்கண்ணு செல்லும் சாலையில் நெளாலாக் கூட்டு ரோடு அருகே கண்காணிப்பில் இருந்த போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வெள்ளை நிற மாருதி ஆம்னி வாகனம் வந்தது அதை மடக்கிய போது அதன் ஓட்டுநர் தப்பி ஓடிவிட்டார்.

2. பின்பு வாகனத்திலிருந்த நபர்களை விசாரித்த போது அவர்கள்

தங்கள் பெயர் பாலாஜி, ராஜசேகர், சரவணன், ராஜேஸ் என்று தெரிவித்தார்கள். அந்த வாகனத்தை சோதணை செய்த போது 12 செம்மரக்கட்டைகள் இருப்பது கண்டறியப்பட்டது. அவர்களில் ராஜசேகர் என்பவரிடம் விசாரித்த போது செப்டம்பர் மாதம் மாம்பாக்கம் ஏரியிலிருந்து மூன்று செம்மரங்களை வெட்டி எடுத்து வந்து நெளாலாக் அருகே உள்ள பாலாஜி என்பவரின் விவசாய நிலத்தில் பதுக்கி வைத்திருந்தனர்

3. பின்பு அதே மாம்பாக்கம் ஏரியில் ஏழு செம்மரங்களை வெட்டி எடுத்து வந்து கோவிந்தசேரி கருணாகரன் என்பவரிடம் விலை பேசிவிற்றுவிட்டதாகவும் மீண்டும் அக்டோபர் மாதம் தகரகுப்பம் ஏரியில் 9 செம்மரங்களை வெட்டி எடுத்து வந்து அதே கருணாகரன் என்பவரிடம் விலை பேசி விற்றுவிட்டதாகவும் மீதமிருந்த கட்டைகளை காரில் ஏற்றி வந்ததாகவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்தார். இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்து அதில் கையொப்பம் இட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி ராஜசேகரன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம்தான் நான் பதிவு செய்ததாகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **பு.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பின்பு எச்.நமுனாவை தயார் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் எச்.நமுனாதான் நான் தயார் செய்ததாகும். அந்த எச்.நமுனா **பு.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்ற எதிரிகளான பாலாஜி, ராஜேஸ், சரவணன் ஆகியோர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் மேற்கண்ட எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூங்களில் உள்ள 5ம் கையொப்பங்கள் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் முறையே **பு.சா.ஆ.4, 5 மற்றும் 6** ஆக குறியீடு

செய்யப்படுகிறது.

5. பின்பு வனக்காப்பளர் ஆறுமுகம் என்பவர் தயார் செய்த அரசுதரப்பு மகசரில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அரசு தரப்பு மகசரில் உள்ள 3வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **பு.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. பின்பு வனவர் ஜெயகுமார் என்பவர் தயார் செய்த சொத்து விவரப் பட்டியளான படிவம் 95ல் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் சொத்து விவரப் பட்டியளான படிவம் 95ல் உள்ள 4வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **பு.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு ஒப்புதல் வாக்குமூலம் அளித்த எதிரிகளை கைது செய்து வனசரக அலுவலகத்திற்கு அழைத்து வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

**7ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

1. சம்பவ இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் சுமார் அரை மணிநேரம் இருந்தேன். வழக்கு தொடர்பாக தனிநபர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம், கையொப்பம் பெறவில்லை என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் என்னுடன் யார்யார் இருந்தார்கள் என்றால் வனசரக அலுவலர், வன காப்பாளர் இருந்தார்கள் மேலும் சமூக காடுகள் சரகர் குழுவின் வனசரக அலுவலர் ஜெயசந்திரன், வனவர் பாலாஜி, முரளிதரன் இருந்தார்கள்.

2. இந்த வழக்கு சம்பந்தமாக வனசரக அலுவலர் மற்றும் சமூக காடுகள் சரக குழுவினர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால்

இல்லை. எதிரியிடமிருந்து எந்த விதமான வழக்குச் சொத்துக்களையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. குறிப்பாக 7ம் எதிரி நந்தன் (எ) நந்தகோபல் பற்றி எந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு மாவட்ட வன அலுவலரின் ஆணையின் பெயரில் போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. நான் மேல் அதிகாரிக்கு பவ்வியப்பட்டு நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் முதல்முறையாக இன்றுதான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கம் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**6ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

1. சம்பவ இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு அருகே எம்.ஜி.ஆர். சிலை, ஆஞ்சநேயர் சிலை, ஸ்கூல், கடைகள் ஆகியவை என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடம் மற்றும் நான் கையொப்பம் செய்த பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. நான் உண்மையில் சம்பவ இடம் சென்று முதன்மை சாட்சியத்தில் கூறியது போல் சம்பவம் நடந்திருந்தால் மேற்கூறியவைகள் பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

2. வாகனத் தனிக்கையின் போது ஒரு ஆம்மினி வாகனம் கைப்பற்றப்பட்டதாக கூறியுள்ளேன். அந்த வாகனம் யார் பெயரில் உள்ளது என்பதை குறித்து ஆராய அதன் ஆர்.சி. மற்றும் பர்மிட்டை பெற்று விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல விசாரித்தோம். அதன் ஆர்.சி புக் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. அது தாக்கல் செய்யப்பட்டதா என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

3. எதிரி அடையாளம் காட்டியதன் பேரில் பதுக்கி வைத்திருந்ததாக சொல்லப்படும் இடத்தில் விசாரணை செய்ததற்கு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் பட்டா போன்ற ஆவணங்களை கைப்பற்றி விசாரணை செய்தோமா என்றால் எனக்கு தெரியாது. பதுக்கி வைத்திருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் உடன்சென்றேனா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் உண்மையில் எதிரிகளால் என் முன்பாக அளிக்கப்பட்டிருந்தால் நானும் பதுக்கி வைத்ததாக சொல்லப்படும் இடத்திற்கு உடன் சென்றிருப்பேன் என்றால் சரியல்ல.

4. நான் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் அரைமணிநேரம் இருந்தேன். அந்த அரை மணிநேரத்தல் என்னென் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றாலும் எந்தெந்த அலுவலர் என்னென்ன ஆவணங்கள் தயார் செய்தார்கள் என்றாலும் குறிப்பாக எந்தெந்த அலுவலர் எந்தெந்த எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள் என்றாலும் எனக்கு நினைவில்லை அனைவரும் சேர்ந்துதான் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5. நான் வாகனத் தனிக்கை செய்யப்பட்டதாக சொல்லும் இடத்தில் ஜனநடமாட்டம் அதிகம் உள்ளது என்றால் சரிதான். அப்படியென்றால் பொது சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதற்கான காரணம் நாங்களாகவே அலுவலகத்திலேயே ஆவணங்கள் தயார் செய்து எடுத்து வந்து சம்பவ இடத்தில் மற்ற அலுவலர்களை அழைத்து கையொப்பம் பெற்றோம் என்றால் சரியல்ல.

6. எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் 6ம் எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் இடையே இருந்த பழக்க வழக்கம் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை என்றால் ஞாபகம் இல்லை. நான் வழக்கு சம்பந்தமாக எந்த

பங்களிப்பும் இல்லை என்றும் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புள்ளிவிவரத்திற்காக இவ்வழக்கு போடப்பட்டது என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

1. சம்பவம் நடந்த போது நான் எந்த பதவியில் இருந்தேன் என்றால் வனகாப்பாளராக இருந்தேன். நான் எந்த பகுதிக்கு வன காப்பாளராக இருந்தேன் என்றால் திருவலத்தில் வனகாப்பாளராக இருந்தேன். அங்கு என்னென்ன பணி செய்து வந்தேன் என்றால் வனசரகம் தொடர்பான நீதிமன்ற பணிகளை கவணிப்பது, வனத்தனிக்கைக்கு உடன் செல்வது, தயலம் மரங்களை வெட்டி பேப்பர் மில்களுக்கு அனுப்பவது போன்ற வேலைகள் செய்தேன்.

2. சம்பவத்தின் போது சம்பவ இடத்திற்கு வன அலுவலருடன் எவ்வாற, எத்தனை நபர்கள் சென்றோம் எனறால் அதிகாரியுடன் சேர்த்து 5 நபர்கள் ஜீப்பில் சென்றோம். நாங்கள் சாதாரண ரோந்து பணிக்குச் சென்றோமா என்றால் வனசரக அலுவருக்கு கிடைத்த தகவலின் பேரில் சென்றோம். சம்பவ சமயம் வழக்கு ஆவணங்கள் தயார் செய்வதற்கான உபகரனங்கள் வைத்திருந்தோமா என்றால் இருந்தது. எந்த தேதி, நேரத்தில் சம்பவ இடம் சென்றோம் என்றால் 15.12.2010ம் தேதியில் காலை 11.00 மணிக்குச் சென்றோம். எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார் அரைமணிநேரம் இருந்தோம்.

3. சம்பவ இடத்தில் இருந்த அரை மணிநேரத்தில் யார்யார் பார்வை மகசர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகசர், ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் வரைபடம் பாலாஜியும் பார்வை மகசர் ஆறுமுகம் தயார்

செய்தனர். அவர் தயார் செய்த பார்வை மகசரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அரசு தரப்பு மகசர் என்றால் என்ன அது பார்வை மகசர். அந்த பார்வை மகசரில் சம்பவயிடத்தில் என்னென்ன இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இடத்தை மட்டும்தான் குறிப்பிட்டுள்ளது மற்ற அடையாளங்கள் ஏதும் குறிப்பிடவில்லை.

4. வன அலுவலர் வேறு என்ன ஆவணங்கள் தயார் செய்தார் அதில் எந்த ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்றால் அரசு தரப்பு மகசர், சொத்துவிவரப்பட்டியல், எச்.நமுனா, ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றில் கையொப்பம் செய்தேன். படிவம்95 யார் தயார் செய்தது என்றால் ஜெயகுமார். எச்.நமுனா நான் தயார் செய்தேன். எச்.நமுனாவை என்ன நேரத்தில் தயார் செய்தேன் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் எங்க பெறப்பட்டது என்றால் சம்பவ இடத்தில். நான்கு ஒப்புதல் வாக்குமூலங்களும் அன்றே ஒரே நேரமான 11.30 மணியளவில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்ன வகையான எத்தனை மரங்கள் திருடு போனது என்பதை விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்யும் போது சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன்.

6. சம்பவ தேதியான 15.12.2010ம் தேதியன்று சம்பவயிடத்தில் பிடிக்கப்பட்ட வழக்கு சொத்தை வைத்துதான் பாணாவரம் காவல் நிலையத்தில் ஒரு வழக்கும், வாழப்பநதல் காவல் நிலையத்தில் இரண்டு வழக்கும், கலவை காவல் நிலையத்தில் ஒரு வழக்கும், சிப்காட் காவல் நிலையத்தில் ஒரு வழக்கும், வனசரக அலுவலகம் மூலம் ஒரு வழக்கும் பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல அந்த காவல் நிலையங்களில் வழக்குகள் முன்பே பதிவு செய்யப்பட்டிருந்தது அதற்கான சொத்தை இந்த வழக்கின்

ஒப்புதல் வாக்குமுலத்தின் பேரில் பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய மூன்று காவல் நிலையத்தின் வழக்குகளும் போதுமான முகாந்திரம் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

7. சிப்காட் காவல் நிலையத்தின் வழக்கில் நான் சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றாலும் அதில் குற்றவாளிகள் நிரபராதிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எங்க ஒப்படைக்கப்பட்டது என்றால் உதவி வனபாதுகாவலர் வேலூர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. வழக்கு சொத்தின் புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. யார் வேலூர் வனபாதுகாப்பு அலுவலகத்தில் வழக்கு சொத்தை ஒப்படைத்தது என்றால் தெரியாது.

8. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை என்றாலும் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. எங்கள் பாதுகாப்பில் உள்ள வனத்தில் எங்களால் ஏற்பட்ட இழப்பீட்டை சரிசெய்ய வேண்டி எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வனசரக அலுவலர் பதிவு செய்த பொய்யான வாக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(5ம் எதிரிதரப்பில் மேற்கூறிய குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.)

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO.417/2011 LW-4 PW-3

| | |
|---|---|
| Name | ஆறுமுகம் |
| Husband/Father Name | குல்லபிள்ளை |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | வனவர் (ஓய்வு) |
| Age | 67 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 29.07.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரிகள் 3, 6 ஆஜர். எதிரிகள் 2, 5, 7 ஆஜரில் இல்லை. எதிரிகள் 2, 5, 7 சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது 1 மற்றும் 4 எதிரிகள் இறந்துவிட்டனர் )**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வனவராக பணிப்புரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 15.12.2010 அன்று அம்மூர் வனக்காப்பாளராக பணியிலிருந்த போது மேற்குறிப்பிட்ட தினத்தன்று வனசரகர் காளிதாஸ், வனவர் ஜெயகுமார், வனகாப்பாளர் ரேணுகோபால், ஆறுமுகம் மற்றும் சமூக நலகாடுகள் வனசரகர் ஜெயசந்திரன், வனவர் பாலாஜி, முரளி ஆகியோர்களுடன் இணைந்து காரை டூ புலியங்கண்ணு பகுதிக்கு ரோந்து பணிக்குச் சென்றபோது நௌளாலாக் கூட்டு ரோட்டில் 11.30 மணியளவில் நௌளாலாக் ரோட்டிலிருந்து ஆம்னி வேன் ஒன்று வேகமாக வந்தது அதை தடுத்து நிறுத்திய போது முன்பக்கமாக அமர்ந்திருந்த ஒருவர் இறங்கி தப்பு ஓடிவிட்டார். பின்பு அந்த வாகனத்தை சென்று பார்த்த போது அதில் 4 நபர்கள் இருந்தார்கள். அவர்களின் பெயர்

பாலாஜி, ராஜசேகர், ராஜேஸ் மற்றும் சரவணன் ஆகியோர்கள் இருந்தார்கள். காரை சோதனை செய்த போது அதில் 12 செம்மரத் துண்டுகள் இருந்ததை கண்டறியப்பட்டது.

2. பின்பு அவர்களை விசாரித்து அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. வனக்காப்பாளர் ரேணுகோபால் என்பவர் எச்.நமுனாவை தயார் செய்தார். நான் அரசு மகஜரை தயார் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அரசு தரப்பு மகஜர்தான் நான் தயார் செய்தது ஆகும். அதில் என்னுடன் வந்த வனத்துறையை சார்ந்த அலுவலர்களிடம் நான் சாட்சி கையொப்பம் பெற்றேன். அந்த அரசுதரப்பு மகசர் **பு.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்பு 4 எதிரிகள் கொடுத்த தனித்தனியான ஒப்புதல் வாக்குமூலங்களில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 4வது கையொப்பங்கள் என்னுடைதுதான். அந்த கையொப்பங்கள் முறையே **பு.சா.ஆ.10, 11, 12 மற்றும் 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு ஜெயகுமார் என்பவர் தயார் செய்த படிவம் 95 லும் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் படிவம் 95ல் உள்ள 3ம் கையொப்பம் என்னுடையதுதான். அது **பு.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பின்பு அந்த 4 எதிரிகளையும் கைது செய்து வனசரக அலுவலகத்திற்கு அழைத்து வந்து வனவர் முரளிதரன் என்பவர் சிவப்பு மையினால் ஆம்னி வேண் மற்றும் 12 கட்டைகளின் மீது 4/2010 STOR எண் கொடுக்கப்பட்டது. பிறகு பிரிவு 49 ன் கீழ் மாவட்ட உதவி வனப்பாது காவலரிடம் காண்பித்து சி.பி. எண் 6/2010 என்ற எண் கொடுக்கப்பட்டு ஆம்னி வேண் மற்றும் செம்மரக்கட்டைகளை பாதுகாப்பாக வனசரக அலுவலகத்தில் வைக்கப்பட்டது. பின்பு 4 எதிரிகளையும் வாலாஜா நீதிமன்றம்

அழைத்துச் சென்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். வழக்கு சம்பந்தமாக வனசரகர் காளிதாஸ் என்னை விசாக்கவில்லை

## 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -

1. சம்பவம் நடந்த போது நான் எந்த பதவியில் இருந்தேன் என்றால் வனகாப்பாளராக இருந்தேன். நான் எந்த பகுதிக்கு வன காப்பாளராக இருந்தேன் என்றால் அம்மூரில் வனகாப்பாளராக இருந்தேன். அங்கு என்னென்ன பணி செய்து வந்தேன் என்றால் வனசரகம் தொடர்பான நீதிமன்ற பணிகளை கவணிப்பது, வனத்தனிக்கைக்கு உடன் செல்வது, தயலம் மரங்களை வெட்டி பேப்பர் மில்களுக்கு அனுப்பவது போன்ற வேலைகள் செய்தேன்.

2. இந்த வழக்கில் அரசு தரப்பு மகசர் நான் தயார் செய்தேன். அதில் யார்யாரிடம் சாட்சியாக கையொப்பம் பெற்றேன் என்றால் என்னுடன் வந்த அனைத்து நபர்களிடமும் பெற்றேன். நான் தயார் செய்த மகசரில் அலுவலக முத்திரை இடாமல் கையொப்பம் மட்டும் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. சம்பவ தேதியான 15.12.2010ம் தேதியன்று சம்பவயிடத்தில் பிடிக்கப்பட்ட வழக்கு சொத்தை வைத்துதான் பாணாவரம் காவல் நிலையத்தில் ஒரு வழக்கும், வாழப்பநதல் காவல் நிலையத்தில் இரண்டு வழக்கும், கலவை காவல் நிலையத்தில் ஒரு வழக்கும், சிப்காட் காவல் நிலையத்தில் ஒரு வழக்கும், வனசரக அலுவலகம் மூலம் ஒரு வழக்கும் பதியப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை அந்த காவல் நிலையங்களில் புகார் அளித்திருப்பார்கள். மேற்கூறிய மூன்று காவல் நிலையத்தின் வழக்குகளும் போதுமான முகாந்திரம் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

4. சிப்காட் காவல் நிலையத்தின் வழக்கில் நான் சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றாலும் அதில் குற்றவாளிகள் நிரபராதிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.வழக்கு சொத்து எங்கு ஒப்படைக்கப்பட்டது என்றால் உதவி வனபாதுகாவலர் வேலூர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. வழக்கு சொத்தின் புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. யார் வேலூர் வனபாதுகாப்பு அலுவலகத்தில் வழக்கு சொத்தை ஒப்படைத்தது என்றால் நான்தான் ஒப்படைத்தேன். நான் வழக்குச் சொத்தை மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் ஒப்படைத்தற்கு இரசீது பெற்றேனா என்றால் இல்லை.

5. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை என்றாலும் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. எங்கள் பாதுகாப்பில் உள்ள வனத்தில் எங்களால் ஏற்பட்ட இழப்பீட்டை சரிசெய்ய வேண்டி எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வனசரக அலுவலர் பதிவு செய்த பொய்யான வாக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**6ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

1. பார்வை மகசர் நான்தான் தயார் செய்தேன் என்றால் சரிதான். சம்பவ இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு அருகே எம்.ஜி.ஆர். சிலை, ஆஞ்சநேயர் சிலை, ஸ்கூல், கடைகள் ஆகியவை என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரி வரைபடம் மற்றும் நான் கையொப்பம் செய்த பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். நான் உண்மையில் சம்பவ

இடம் சென்று முதன்மை சாட்சியத்தில் கூறியது போல் சம்பவம் நடந்திருந்தால் மேற்கூறியவைகள் பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

2. வாகனத் தனிக்கையின் போது ஒரு ஆம்மினி வாகனம் கைப்பற்றப்பட்டதாக கூறியுள்ளேன். அந்த வாகனம் யார் பெயரில் உள்ளது என்பதை குறித்து ஆராய அதன் ஆர்.சி. மற்றும் பர்மிட்டை பெற்று விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அதன் ஆர்.சி புக் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யவில்லை.

3. எதிரி அடையாளம் காட்டியதன் பேரில் பதுக்கி வைத்திருந்ததாக சொல்லப்படும் இடத்தில் விசாரணை செய்ததற்கு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யப்பட்டதா என்றால் அந்த இடத்திலிருந்து எதிரிகள் வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்கள் அந்த பதுக்கி வைத்திருந்த இடத்திற்கு நாங்கள் செல்லவில்லை. அந்த பதுக்கி வைத்திருந்த இடம் தனிநபர் இடமா நௌாவ்ளாக் இடமா என்றால் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் உண்மையில் எதிரிகளால் என் முன்பாக அளிக்கப்பட்டிருந்தால் நானும் பதுக்கி வைத்ததாக சொல்லப்படும் இடத்திற்கு உடன் சென்றிருப்பேன் என்றால் சரியல்ல.

4. நான் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் 11.30 மணிக்குச் சென்று அரைமணிநேரம் இருந்தேன். அந்த அரை மணிநேரத்தில் என்னென் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றாலும் எந்தெந்த அலுவலர் என்னென்ன ஆவணங்கள் தயார் செய்தார்கள் என்றால் ஜெயகுமார் அலுவலர் எதிரி பாலாஜியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். பாலாஜி வனவர் ராஜசேகரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். ரேணுகோபால் வனகாப்பாளர் ராஜேஸின் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். முரளி வனவளர் எதிரி சரவணனின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். நான்

மேற்கூறியவை அனைத்தும் அ.சா.2 கூறியதன் பேரில் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. நான் வாகனத் தனிக்கை செய்யப்பட்டதாக சொல்லும் இடத்தில் ஜனநடமாட்டம் அதிகம் உள்ளது என்றால் சரிதான். அப்படியென்றால் பொது சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதற்கான காரணம் நாங்களாகவே அலுவலகத்திலேயே ஆவணங்கள் தயார் செய்து எடுத்து வந்து சம்பவ இடத்தில் மற்ற அலுவலர்களை அழைத்து கையொப்பம் பெற்றோம் என்றால் சரியல்ல.

6. எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் 6ம் எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் இடையே இருந்த பழக்க வழக்கம் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு சம்பந்தமாக எந்த பங்களிப்பும் இல்லை என்றும் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புள்ளிவிவரத்திற்காக இவ்வழக்கு போடப்பட்டது என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**7ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

1. சம்பவ இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் சுமார் அரை மணிநேரம் இருந்தேன். வழக்கு தொடர்பாக தனிநபர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம், கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் என்னுடன் யார்யார் இருந்தார்கள் என்றால் ஜெயகுமார் வனவர், ரேணுகோபால் வனகாப்பாளர், காளிதாஸ் வனசரகர், அறுமுகம் வனகாப்பாளர், ஜெயசந்திரன் வனசரகர், வனவர் பாலாஜி, முரளிதரன் இருந்தார்கள். நௌளாலாக் என்னுடைய வனசரகம் இல்லை என்றால் சரியல்ல. நான் அம்மூர்

பீட் வனகாப்பாளர் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கு சம்பந்தமாக வனசரக அலுவலர் மற்றும் சமூக காடுகள் சரக குழுவினர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து எந்த விதமான வழக்குச் சொத்துக்களையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. குறிப்பாக 7ம் எதிரி நந்தன் (எ) நந்தகோபல் பற்றி எந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு மாவட்ட வன அலுவலரின் ஆணையின் பெயரில் போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. நான் மேல் அதிகாரிக்கு பவ்வியப்பட்டு நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் முதல்முறையாக இன்றுதான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கம் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

(5ம் எதிரிதரப்பில் மேற்கூறிய குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.)

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA
District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.07.30 15:02:05 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.